# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## குழித்துறை நகராட்சி

**குழித்துறை நகர் மன்றத்தின் 30–10–2018 செவ்வாய் கிழமை நடைபெற்ற சாதாரண கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்**

பொருள் எண் .1

நகராட்சிகளில் 01.04.2018 அரையாண்டு முதல் பொது சொத்துவரி சீராய்வு மேற்கொள்ள பிறப்பிக்கப்பட்ட அரசாணை எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகு (நிதி IV) துறை நாள்.19.07.2018–ன்படி கீழ்கண்டுள்ள விபரப்படியாக சொத்துவரி சீராய்வு மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | குடியிருப்பு கட்டிடஙகள் | 50 % மிகாமல் |
| 2 | வாடகை குடியிருப்பு கட்டிடஙகள் | 100% மிகாமல் |
| 3 | குடியிருப்பு அல்லாத கட்டிடஙகள் | 100 % மிகாமல் |

அரசாணை எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகு (நிதி IV) துறை நாள்.30.07.2018–ன் படி மேற்படி வரிசை எண்.2–ல் உள்ள வாடகை குடியிருப்பு கட்டிடஙகளுக்கு 100 % மிகாமல் வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும் என்பதனை நீக்கறவு செய்து கீழ்கண்டவாறு

| | | |
|---|---|---|
| 1 | குடியிருப்பு கட்டிடஙகளுக்கு | 50 % மிகாமலும், |
| 2 | குடியிருப்பு அல்லாத கட்டிடஙகளுக்கு | 100% மிகாமலும் |

பொது சொத்துவரி சீராய்வு மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணைகளின்படி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 20555/2018/ஆர்1, நாள். 20.08.2018 மற்றும் வழிகாட்டுதலின்படி சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டுமெனவும், மேலும் சொத்துவரி விதிப்பு நியாயமானதாகவும், முறையானதாகவும், ஏற்றத்தாழ்வுகள் அற்றதும், வெளிப்படை தன்மை கொண்டதாக இருத்தல் வேண்டுமெனவும் இப்புதிய முறை சொத்துக்கள் அமைந்துள்ள பகுதிகளின் வாடகை அடிப்படையில் அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்து மண்டல அடிப்படை மதிப்பை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.4314/93/ஆர்1, நாள்.11.01.93–ன் படி மாற்றியமைத்து சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.2035/2018/அ2, நாள்.24.08.2018–ன் படி பொது சொத்துவரி நிர்ணயம் செய்ய நியமிக்கப்பட்ட குழு சமர்பித்த அறிக்கையின்படி கீழ்கண்ட விபரப்படியாக மண்டல அடிப்படை மதிப்பில் சிறிது உயர்வு செய்தும், மண்டலத்தினை மாற்றியமைத்தும் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டது.

**அடிப்படை மண்டல மதிப்பு –**

| மண்டலங்கள் | ஏற்கெனவே உள்ள அடிப்படை மதிப்பு (சதுர அடிக்கு) | தற்பொழுது நிர்ணயம் செய்யும் அடிப்படை மதிப்பு (சதுர அடிக்கு) |
|---|---|---|
| A | ரூ.1.30 | ரூ.2.00 |
| B | ரூ.0.90 | ரூ.1.50 |
| C | ரூ.0.65 | C மண்டலத்திலுள்ள தெருக்கள் நீக்கம் செய்யப்பட்டு இதர மண்டலத்தில் சேர்க்கப்பட்டுள்ளது |

**மண்டலங்கள்–**

| வார்டு எண் | Street Code | பிளாக், கதவு எண் | 1–4–2008 பொது சொத்துவரி சீராய்வின் போது நிர்ணயிக்கப்பட்ட மண்டலம் | 1–4–2018 பொது சொத்துவரி சீராய்வின் படி தற்போது மாற்றியமைக்கப்படும் மண்டலம் | தெரு பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | 01 | 16–1 முதல் 63 | B | A | இடைவிளாகம் வார்டு |
| | 02 | 16–64 முதல் 115 | C | B | |
| | 03 | 17–9 முதல் 45 | C | B | |
| 2 | 01 | 17–1 முதல் 8 | C | B | நரியன்விளை வார்டு |
| | 02 | 17–46 முதல் 83 | C | B | |
| | 03 | 18–1 முதல் 74 | C | B | |
| 3 | 01 | 19–1 முதல் 25 | B | A | பெருந்தெரு வார்டு |
| | 02 | 19–26 முதல் 96 | C | B | |
| 4 | 01 | 20–1 முதல் 98 | C | B | கச்சேரி வார்டு |
| | 02 | 21–1 முதல் 37 | B | A | |
| 5 | 01 | 21–38 முதல் 102 | B | B | பேலஸ் வார்டு |
| | 02 | 22–1 முதல் 78 | B | A | |
| | 03 | 23–1 முதல் 88 | B | A | |
| 6 | 01 | 14–1 முதல் 29 | A | A | செங்கன்மூலை வார்டு |
| | 02 | 14–30 முதல் 48 | B | A | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 03 | 14–49 முதல் 106 | C | B | |
| | 04 | 15–1 முதல் 67 | B | A | |
| | 05 | 15–68 முதல் 106 | A | A | |
| 7 | 01 | 13–1 முதல் முழுவதும் | C | B | இடக்குளம் வார்டு |
| | 02 | 14–68 முதல் 103 | C | B | |
| 8 | 01 | 11–13 முதல் 44 | B | A | திருத்துவபுரம் வார்டு |
| | 02 | 12–1 முதல் 48 | C | B | |
| | 03 | 12–49 முதல் 88 | B | A | |
| 9 | 01 | 10–1 முதல் 104 | C | B | ஹில் வார்டு |
| | 02 | 11–1 முதல் 14, 45 முதல் | A | A | |
| 10 | 01 | 8–1 முதல் 71 | C | B | பிறிட்ஜ் வார்டு |
| | 02 | 9–1 முதல் 15 | B | A | |
| | 03 | 9–16 முதல் 44 | A | A | |
| | 04 | 9–45 முதல் 81 | C | B | |
| 11 | 01 | 24–1 முதல் 40 | A | A | வெட்டுவெந்நி வார்டு |
| | 02 | 24–41 முதல் 118 | B | A | |
| | 03 | 7–62 முதல் 74 | A | A | |
| 12 | 01 | 26–1 முதல் 71 | B | B | கிருஷ்ணன்கோவில் வார்டு |
| | 02 | 26–72 முதல் 94 | C | B | |
| 13 | 01 | 27 முழுவதும் | A | A | சிங்கிளேயர் வார்டு |
| 14 | 01 | 25–32 முதல் 63 | A | A | பருத்திவிளை வார்டு |
| | 02 | 25–1 முதல் 31 | B | B | |
| | 03 | 25–64 முதல் 98 | B | B | |
| 15 | 01 | 28–1 முதல் 87 | A | A | எமிலன் வார்டு |
| | 02 | 29–1 முதல் 83 | B | A | |
| 16 | 01 | 30–1 முதல் 39 | C | B | கிறிஸ்துராஜபுரம் வார்டு |
| | 02 | 40 முதல் 92 | B | A | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 17 | 01 | 31–1 முதல் 38 | C | B | கொடுங்குளம் வார்டு |
| | 02 | 31–39 முதல் 83 | B | A | |
| | 03 | 32–12 முதல் 32 | B | A | |
| | 04 | 32–33 முதல் 107 | A | A | |
| 18 | 01 | 1–1 முதல் 42 | B | A | பம்மம் வார்டு |
| | 02 | 1–43 முதல் 70 | A | A | |
| | 03 | 1–71 முதல் 93 | C | B | |
| | 04 | 32–1 முதல் 11 | B | A | |
| 19 | 01 | 2–1 முதல் 45 | B | A | அம்மன்கோவில் வார்டு |
| | 02 | 2–46 முதல் 97 | A | A | |
| | 03 | 3–1 முதல் 11 | C | B | |
| | 04 | 4–60 முதல் 77 | C | B | |
| 20 | 01 | 3–12 முதல் 34 | C | B | மார்க்கெட் வார்டு |
| | 02 | 3–35 முதல் 114 | A | A | |
| | 03 | 4–1 முதல் 23 | B | A | |
| | 04 | 4–24 முதல் 52 | A | A | |
| | 05 | 5–89 முதல் 117 | B | A | |
| 21 | 01 | 5–1 முதல் 88 | A | A | ஆஸ்பத்திரி வார்டு |
| | 02 | 6–1 முதல் 93 | A | A | |
| | 03 | 7–1 முதல் 61 | A | A | |

சிறப்பு இன கட்டிடங்களுக்கான நட்சத்திர ஹோட்டல், வணிக வளாகங்கள், குளிர்சாதன வசதியுள்ள திருமண மண்டபங்கள், சிறப்பு தனி மருத்துவமனைகள், மல்டிப்ளக்ஸ் ஆகியவற்றிற்கு அடிப்படை மண்டல மதிப்பு அனைத்து வார்டுகளுக்கும் A மண்டலத்தில் நிர்ணயம் செய்வதற்கும், அரசின் ஆணை மற்றும் வழிகாட்டுதலில் வழஙகப்பட்டுள்ள கட்டிடத்திற்கான தள்ளுபடி மற்றும் சலுகைகள் அடிப்படையில் 01.04.2018 முதல் பொது சொத்துவரி சீராய்வு மேற்கொள்ள அஙகீகாரத்திற்காக பொருள் வைக்கப்பட்டதில் நகர்மன்ற தீர்மானம் எண்:3180, நாள்.04.09.2018– இன் படி அஙகீகாரம் வழஙகப்பட்டுள்ளது. மேற்படி நகர்மன்ற தீர்மானத்தினை 13.09.2018 அன்றைய தினசரி நாளிதழில் விளம்பரம் செய்து நகராட்சி பகுதிகளுக்குட்பட்ட வரிவிதிப்பாளர்களுக்கு ஆட்சேபனை ஏதும் இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30 தினஙகளுக்குள் நேரிலோ, தபால்

மூலமாகவோ மற்றும் இணையதள முகவரியில் குழித்துறை நகராட்சி ஆணையருக்கு அனுப்பலாம் என சொத்துவரி திருத்த அறிக்கை வெளியிடப்பட்டது.

மேற்படி சொத்துவரி திருத்த அறிக்கை வெளியிடப்பட்டதினை ஆட்சேபித்து **26–09–2018** அன்று **3** மனுக்களும் **28–09–2018** அன்று ஒரு மனுவும் வரப்பட்டது. மேற்படி ஆட்சேபனை மனுக்களில், குழித்துறை நகராட்சியில் சொத்துவரி விதிப்பானது A, B, C என மூன்று மண்டலங்களாக பிரிக்கப்பட்டிருந்தது. தற்போது C மண்டலத்தை ரத்து செய்யப்பட்டுள்ளது எனவும் நகராட்சி பகுதியில் 70% மக்கள் C பகுதியில் இருப்பதாகவும், இதனால் சாலை வசதிகள் ஏதும் இல்லாத பகுதியில் வாழும் ஏழை மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் எனவும் தெரிவித்து ‘C’ மண்டலத்தை ரத்து செய்யும் முடிவை மறுபரிசீலனை செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஆட்சேபனை மனுக்களை பரிசீலித்து அடிப்படையில் தேசிய நெடுஞ்சாலைகளையோ மாநில நெடுஞ்சாலைகளையோ ஒட்டி அமையாமலும், நகர எல்லையை ஒட்டி அமைந்துள்ளதும், குடியிருப்பு பகுதிகளை உள்ளடக்கிய பிளாக்குகளுக்கு C மண்டலத்தில் சேர்க்க சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்ட குழுவால் பரிந்துரை செய்யப்பட்டதின் அடிப்படையில் கீழ்கண்டவாறு மண்டலம் மாற்றி அமைக்கலாம்.

**அடிப்படை மண்டல மதிப்பு –**

| மண்டலங்கள் | ஏற்கெனவே உள்ள மதிப்பு | தற்பொழுது நிர்ணயம் செய்யும் அடிப்படை மதிப்பு |
|---|---|---|
| A | ரூ.1.30 | ரூ.2.00 |
| B | ரூ.0.90 | ரூ.1.50 |
| C | ரூ.0.65 | ரூ.1.00 |

ஆட்சேபனைகள் பரிசீலிக்கப்பட்டு திருத்தியமைக்கப்பட்ட மண்டலங்கள்

| வார்டு எண் | Street Code | பிளாக், கதவு எண் | நகர்மன்ற தீர்மான எண்.3180, நாள் 4–9–2018–ன்படி நிர்ணயிக்கப்பட்ட மண்டலம் | ஆட்சேபனைகள் பரிசீலிக்கப்பட்டு திருத்தியமைக்கப்பட்ட மண்டலம் | தெரு பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | 01 | 16–1 முதல் 63 | A | A | இடைவிளாகம் வார்டு |
| | 02 | 16–64 முதல் 115 | B | B | |
| | 03 | 17–9 முதல் 45 | B | C | |
| 2 | 01 | 17–1 முதல் 8 | B | C | நரியன்விளை வார்டு |
| | 02 | 17–46 முதல் 83 | B | C | |
| | 03 | 18–1 முதல் 74 | B | B | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | 01 | 19–1 முதல் 25 | A | A | பெருந்தெரு வார்டு |
| | 02 | 19–26 முதல் 96 | B | B | |
| 4 | 01 | 20–1 முதல் 98 | B | B | கச்சேரி வார்டு |
| | 02 | 21–1 முதல் 37 | A | B | |
| 5 | 01 | 21–38 முதல் 102 | B | B | பேலஸ் வார்டு |
| | 02 | 22–1 முதல் 78 | A | A | |
| | 03 | 23–1 முதல் 88 | A | A | |
| 6 | 01 | 14–1 முதல் 29 | A | A | செஙகன்மூலை வார்டு |
| | 02 | 14–30 முதல் 48 | A | A | |
| | 03 | 14–49 முதல் 106 | B | B | |
| | 04 | 15–1 முதல் 67 | A | A | |
| | 05 | 15–68 முதல் 106 | A | A | |
| 7 | 01 | 13–1 முதல் முழுவதும் | B | B | இடக்குளம் வார்டு |
| | 02 | 14–68 முதல் 103 | B | B | |
| 8 | 01 | 11–13 முதல் 44 | A | A | திருத்துவபுரம் வார்டு |
| | 02 | 12–1 முதல் 48 | B | B | |
| | 03 | 12–49 முதல் 88 | A | A | |
| 9 | 01 | 10–1 முதல் 104 | B | C | ஹில் வார்டு |
| | 02 | 11–1 முதல் 14, 45 முதல் | A | A | |
| 10 | 01 | 8–1 முதல் 71 | B | C | பிறிட்ஜ் வார்டு |
| | 02 | 9–1 முதல் 15 | A | A | |
| | 03 | 9–16 முதல் 44 | A | A | |
| | 04 | 9–45 முதல் 81 | B | C | |
| 11 | 01 | 24–1 முதல் 40 | A | A | வெட்டுவெந்நி வார்டு |
| | 02 | 24–41 முதல் 118 | A | A | |
| | 03 | 7–62 முதல் 74 | A | A | |
| 12 | 01 | 26–1 முதல் 71 | B | B | கிருஷ்ணன்கோவில் வார்டு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 02 | 26–72 முதல் 94 | B | C | |
| 13 | 01 | 27 முழுவதும் | A | A | சிங்கிளேயர் வார்டு |
| 14 | 01 | 25–32 முதல் 63 | A | A | பருத்திவிளை வார்டு |
| | 02 | 25–1 முதல் 31 | B | B | |
| | 03 | 25–64 முதல் 98 | B | B | |
| 15 | 01 | 28–1 முதல் 87 | A | A | எமிலன் வார்டு |
| | 02 | 29–1 முதல் 83 | A | A | |
| 16 | 01 | 30–1 முதல் 39 | B | C | கிறிஸ்துராஜபுரம் வார்டு |
| | 02 | 40 முதல் 92 | A | A | |
| 17 | 01 | 31–1 முதல் 38 | B | C | கொடுங்குளம் வார்டு |
| | 02 | 31–39 முதல் 83 | A | A | |
| | 03 | 32–12 முதல் 32 | A | A | |
| | 04 | 32–33 முதல் 107 | A | A | |
| 18 | 01 | 1–1 முதல் 42 | A | A | பம்மம் வார்டு |
| | 02 | 1–43 முதல் 70 | A | A | |
| | 03 | 1–71 முதல் 93 | B | B | |
| | 04 | 32–1 முதல் 11 | A | A | |
| 19 | 01 | 2–1 முதல் 45 | A | A | அம்மன்கோவில் வார்டு |
| | 02 | 2–46 முதல் 97 | A | A | |
| | 03 | 3–1 முதல் 11 | B | B | |
| | 04 | 4–60 முதல் 77 | B | B | |
| 20 | 01 | 3–12 முதல் 34 | B | B | மார்க்கெட் வார்டு |
| | 02 | 3–35 முதல் 114 | A | A | |
| | 03 | 4–1 முதல் 23 | A | A | |
| | 04 | 4–24 முதல் 52 | A | A | |
| | 05 | 5–89 முதல் 117 | A | A | |
| 21 | 01 | 5–1 முதல் 88 | A | A | ஆஸ்பத்திரி வார்டு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 02 | 6–1 முதல் 93 | A | A | |
| | 03 | 7–1 முதல் 61 | A | A | |
| | 04 | பஞ்சாயத்து<br>(குடிநீர் இணைப்பு மட்டும்) | C | C | |

மேலும் மக்களின் அடிப்படை தேவைகளான சாலை வசதி ஏற்படுத்தி கொடுத்தல், மழைநீர் வடிகால் அமைத்து கொடுத்தல், துப்புரவு பணி மேற்கொள்ளுதல், தெருவிளக்குகள் அமைத்து கொடுத்தல் போன்ற பணிகள் நகராட்சியால் மேற்கொள்ளப்பட உள்ளதாலும் நிதி நிலையினை கருத்தில் கொண்டு 26–09–2018 மற்றும் 28–09–2018 ஆகிய தினஙகளில் பெறப்பட்ட ஆட்சேபனை மனுக்களை பரிசீலித்து, மண்டலஙகளின் மதிப்பு மற்றும் மண்டலஙகள் மாற்றம் செய்து எடுக்கப்பட்ட முடிவினை மறுபரிசீலனை செய்து 01–04–2018 முதல் மேற்கண்ட விபரப்படியாக மண்டலத்தினை மாற்றியமைத்து பொது சொத்துவரி சீராய்வு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**நகர்மன்றத் தீர்மான எண்.3189**

**அஙகீகரிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 2</u>

Swacch Bharath Mission Solid Waste Management 7th SHPC திட்டத்தின்கீழ் குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் சந்தை அருகில் ரூ.47.60 லட்சம் மதிப்பீட்டில் Micro Compost Centre அமைக்கும் பணி மேற்கொள்ள 28–09–2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| | | |
|---|---|---|
| 1 | திரு.D. ஜஸ்டின்குமார்,<br>12/85 திருவனந்தபுரம் சாலை,<br>குழித்துறை. | மதிப்பீட்டை விட 0.10% குறைவு |
| 2 | திரு.Y. ஜெயசிங,<br>33 VN Colony,<br>இருளப்பபுரம், கோட்டார்,<br>நாகர்கோவில் | மதிப்பீட்டை விட 0.67% அதிகம் |

அ.கு.:– அ) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் திரு.டி. ஜஸ்டின்குமார் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) இப்பணி திட்டப்பணியாக உள்ளதால் அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.டி. ஜஸ்டின்குமார் ஒப்பந்ததாரருக்கு LOA வழஙகி மதிப்பீட்டில் 1% கூடுதல் வைப்புத் தொகை வசூல் செய்து வேலை உத்தரவு வழஙகியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்.3190**

**அஙகீகரிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 3</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் உயர்தரமான குடிநீர் மிகக்குறைந்த விலையில் வழஙக தானியங்கி குடிநீர் மையங்கள் நிறுவப்பட வேண்டும் என தமிழ்நாடு சட்ட மன்றப்பேரவை 2018–2019–ம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறைக்கான மானிய கோரிக்கை எண்.34–க்கான விவாதத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் சிறப்புத் திட்டஙகள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் அறிவிப்பு எண்.14–ல் அறிவித்துள்ளார்கள். மேலும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதம் ந.க.எண்.3137/2018/ஆ1, நாள் 4–9–2018–ல் அனைத்து வார்டுகளிலும் தானியஙகி குடிநீர் மையஙகள் நிறுவ இடம் தேர்வு செய்யவும் ஒப்பந்தப்புள்ளி கோரி செயல்படுத்தவும் அறிவுறுத்தியதன்படி முதற்கட்டமாக கீழ்காணும் 7 இடஙகள் தானியஙகி குடிநீர் மையம் அமைக்க தேர்வு செய்யப்பட்டுள்ளது.

1) வார்டு 3 கழுவன்திட்டை ஆர்.சி.தெரு OHT அருகில்
2) வார்டு 5 சிவன்கோவில் தெரு
3) வார்டு 7 திருத்துவபுரம் OHT அருகில்
4) வார்டு 8 காட்டுவிளை OHT அருகில்
5) வார்டு 9 விளவஙகோடு நூலகம் அருகில்
6) வார்டு 20 பேருந்து நிலையம்
7) வார்டு 11 அலுவலக வளாகம்

தேர்வு செய்யப்பட்டுள்ள பகுதிகளில் தானியஙகும் குடிநீர் மையஙகள் தனியார் தொழில் நிறுவனஙகளுடன் / தொழில் முனைவோர்களுடன் இணைந்து சமூக பொறுப்புணர்வு மற்றும் பிற நிதியினை பெற்று ( Corporate Social Responsibility fund ) செயல்படுத்தவும் அனுபவம் வாய்ந்த மற்றும் உரிய தொழில் நுட்ப நுணுக்கஙகளை கொண்ட தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்ய ஏதுவாக Expressional Interest விளம்பரம் செய்து தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு. :– அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்.3191**
**அஙகீகரிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 4</u>

குழித்துறை நகராட்சிப் பகுதிகளில் கீழ்காணும் திட்டப்பணிகள் மேற்கொள்ள 4–10–2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | குழித்துறை நகராட்சி அலுவலகத்தின் நுழைவு வாயில், சேவை மையம், ஆணையர் அறையின் முன்பகுதி மற்றும் சுகாதார அலுவலர் அறையின் முன் பகுதி, பொறியாளர் அறையின் முன் பகுதி ஆகிய இடங்களில் CCTV கேமரா பொருத்தும் பணி செய்தல் | 3.00 | 1) M/S. Rapid Refills, Nagercoil<br>2) M/S. Kenith Computers, Nagercoil | 0.82% குறைவு<br>4.47% அதிகம் |
| 2 | நகராட்சிக்கு வருகை தரும் தாய்மார்களின் நலன் கருதி இரும்பு பெட்டிக்கடையினை தாய்மார்கள் பாலூட்டும் அறையாக மாற்றி அமைத்தல் | 0.60 | 1) திரு.எஸ். பாபு<br>2) திரு.எ. ஆன்றணி | 0.15% குறைவு<br>0.14% அதிகம் |
| 3 | குழித்துறை நகராட்சிக்குட்பட்ட தேசிய நெடுஞ்சாலை பகுதியில் அமைந்துள்ள ஐசக் மருத்துவமனை அருகிலுள்ள சர்வே எண்.C5/118 அரசு புறம்போக்கு இடத்தில் தனிநபரால் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள சுற்றுச் சுவரினை இடித்து அப்புறப்படுத்தி முள்வேலி அமைக்கும் பணி செய்தல் | 0.30 | 1) திரு.எஸ். பாபு<br>2) திரு.எ. ஆன்றணி | 0.23% குறைவு<br>0.48% அதிகம் |

அ.கு.:– அ) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–ற்கு M/S. Rapid Refills,வரிசை எண்.2 மற்றும் 3–ற்கு திரு.எஸ். பாபு ஆகியோர் கொடுத்துள்ள குறைவானஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்.3192**

**அங்கீகரிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 5</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட வாகனஙகளை கண்காணிக்கும் விதமாக GPS பொருத்துவதற்கும், இதற்கான உத்தேச செலவினம் வாடகை நிரக்கில் ஒராண்டிற்கு (Equipment rented) மதிப்பீடு ரூ.1,20,000/–ற்கு தயார் செய்யப்பட்டுள்ளது.

1) Tipper TN75M 8752
2) Tipper TN75P 1813
3) Tipper TN75J 8227
4) Dumper Placer TN75L 5874
5) TATA ACE TN75M 4923
6) Water Tanker Lorry TN74Z 4605
7) Sullage Lorry

மேற்படி GPS பொருத்துவதற்கும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு. :– அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்.3193**
**அஙகீகரிக்கப்பட்டது**

பொருள் எண். 6

குழித்துறை நகராட்சியில் கீழ்காணும் திட்டப்பணிகள் குடிநீர் நிதியில் மேற்கொள்ள 4–10–2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | குழித்துறை நகராட்சிக்குட்பட்ட நரியன்விளை பகுதியில் அமைந்துள்ள கிணற்றின் 1.5HP ஜெட் நீரேற்றியினை மாற்றி 1.5HP சப்மெர்சிபிள் நீரேற்றி பொருத்துதல் | 0.45 | 1) திரு.என். தாம்சன்<br>2) திரு.சி. சுரேஷ் | 0.03% குறைவு<br>7.19% அதிகம் |
| 2 | குழித்துறை நகராட்சிக்குட்பட்ட சப்பாத்து நீரேற்று நிலையத்திலுள்ள மின் இணைப்பு பழுதடைந்துள்ளதை மாற்றி புதிய 35sq mm 4 core UG cable பொருத்தி புதிய 200 Amps main switch பொருத்துதல் | 1.65 | 1) திரு.பி. ஜெயச்சந்திரன்<br>2) திரு.பி. ஜெயப்பிரகாஷ் | 0.12% குறைவு<br>0.26% அதிகம் |
| 3 | வார்டு எண்.8 திருத்துவபுரம் உண்டனா குழியில் தாழ்வான பகுதியில் தற்போது நகராட்சியால் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணற்றிலிருந்து குடிநீர் குழாய்கள் பதித்து மேடான பகுதிக்கு கொண்டு செல்லும் மற்றும் Sintex tank அமைத்தல் | 0.70 | 1) திரு.சி. சுரேஷ்<br>2) திரு.என். தாம்சன் | 0.04% குறைவு<br>0.34% அதிகம் |
| 4 | சப்பாத்துப் பகுதியிலுள்ள பழுதடைந்த குழாயினை மாற்றி புதிதாக GI பைப் அமைத்தல் | 2.00 | 1) திரு.சி. சுரேஷ்<br>2) திரு.என். தாம்சன் | 0.08% குறைவு<br>0.70% அதிகம் |
| 5 | குழித்துறை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் குடிநீர் பராமரிப்பு பணிகள் செய்தல் | 6.00 | 1) திரு.பி. ஜெயச்சந்திரன்<br>2) திரு.பி. ஜெயப்பிரகாஷ் | 0.09% குறைவு<br>0.58% அதிகம் |

அ.கு.:– அ) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 முதல் 5 வரை குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) குடிநீர் அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் களுக்கு வேலை உத்தரவு வழஙகியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்.3194**

**அஙகீகரிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 7</u>

Swacch Bharath Solid Waste Management திட்டத்தின்கீழ் குழித்துறை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிக்கு மின்கலத்துடன் கூடிய பேட்டரி ஆப்ரேட்டர் வாகனம் ( BOV) 4 எண்ணம் ரூ.7.20 லட்சம் மதிப்பீட்டில் வினியோகம் செய்யும் பணிக்கு 28–09–2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| | | |
|---|---|---|
| 1 | Neptune Automation,<br>254, Arunachala Gounder Thottam<br>Veerapan Palayam,<br>Erode | மதிப்பீட்டை விட 18.06% குறைவு |
| 2 | Priyam Industries and Engineering Pvt. Ltd., No.625, Surya complex<br>2nd Floor, Anna Salai, Chennai | மதிப்பீட்டை விட 0.06% குறைவு |

அ.கு.:– அ) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 Neptune Automation நிறுவனத்தால் கொடுக்கப்பட்டுள்ள குறைவாக ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) இப்பணி திட்டப்பணியாக உள்ளதால் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டில் 1% கூடுதல் வைப்புத் தொகை வசூல் செய்து, குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள Neptune Automation நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழஙகியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்.3195**

**அஙகீகரிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 8</u>

நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் அலுவலக கடிதம் ந.க.எண்.7366/2016/UPA2, நாள் 03–09–2018–ன்படி, சாலையோர வியாபாரிகளின் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுஙகுமுறை) துணை விதிகள் 2018 பெறப்பட்டுள்ளது. எனவே இத்துடன் இணைத்துள்ள துணை விதிகளுக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு :– சாலையோர வியாபாரிகளின் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுஙகுமுறை) துணை விதிகள், 18–னை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ந.க.எண்.159//2017/ந.அ.ஆ.

## சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2018

சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) சட்டம், 2014 (மத்திய சட்டம் எண்.7/2014) 37வது பிரிவின்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) விதிகள், 2015 மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒழுங்குமுறை மற்றும் உரிமம் வழங்குதல்) திட்டம், 2015–ன்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளின் கீழ் குழித்துறை நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2018 கீழ்க்கண்டவாறு ஏற்படுத்தப்படுகின்றது.
மதுரை மாநகராட்சி சட்டம், 1971 அத்தியாயம் 15 பிரிவு 433 / கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம், 1981 அத்தியாயம் 15 பிரிவு 432 / தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 அத்தியாம் 14 பிரிவு 306 மற்றும் அதன் உட்பிரிவுகளில் வழஙகப்பட்டுள்ள அதிகாரஙகளின்படியும், அவற்றிற்கு ஏற்படுத்தப்படும் திருத்தஙகளுக்கு உட்பட்டும், மற்றும் சாலையோர விற்பனையினை ஒழுஙகுப்படுத்தவும், குழித்துறை நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2018 ஏற்படுத்தப்படுகின்றது.

### அத்தியாயம்–1
### முதனிலை

1. **குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.–** இந்த துணை விதிகள் குழித்துறை நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2018 என்றழைக்கப்படும்.

   (2) இந்த துணை விதிகளானது வெளியிடப்படும் நாள் முதல் அமுலுக்கு வரும்

2. **பொருள் வரையறைகள்.–** இந்த துணை விதிகளில், உபயோகப்படும் வார்த்தைகளுக்கான பொருள் வரையறை,
   **(i)** "சட்டம்" என்பது சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுஙகுமுறை) சட்டம், 2014 (மத்திய சட்டம் எண்.7/2014) என்று பொருள்படும்.
   **(ii)** "விற்பனை திட்டம்" என்பது சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட விற்பனை திட்ட வரைப்படம் என்று பொருள்படும்.
   **(iii)** "விதிகள்" என்பது தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுஙகுமுறை) விதிகள், 2015 என்று பொருள்படும்.
   **(iV)** "திட்டம்" என்பது சட்டத்தின் 38வது பிரிவின் கீழ் கட்டமைக்கப்பட்ட தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒழுங்குமுறை மற்றும் உரிமம் வழஙகுதல்) திட்டம், 2015 என்று பொருள்படும்.
   **(V)** "நகர விற்பனைக் குழு" என்பது விதிகளின் கீழ் அமைக்கப்பட்ட ஒரு நகர விற்பனைக் குழு என்று பொருள்படும்.

சட்டம், விதிகள் அல்லது திட்டம் ஆகியவற்றில் வரையறுக்கப்பட்ட வார்த்தைகளும், வெளிபாடுகளும் இந்த துணை விதிகளில் பயன்படுத்தப்படுகின்றன. அவை முறையே சட்டம், விதிகள் அல்லது திட்டம் ஆகியவற்றில் கொண்டுள்ள அதே பொருள்படும்.

## அத்தியாயம்–2
## விற்பனை மண்டலத்தில் விற்பனை செய்யும் விதம் மற்றும் ஒழுஙகு முறைகள்

**3.(1)** பாத சாரிகளின் நடமாட்டம் (Foot fall) மற்றும் சாலையின் அகலம், வாகனம், மற்றும் பாதசாரிகளுக்கான சீரான இயக்கம் ஆகியவற்றின் தன்மையை கருத்தில் கொண்டு விற்பனை மண்டலஙகளை நகர விற்பனைக் குழு முடிவு செய்யும்.

**(2)** ஒரு இடத்தின் கொள்திறனுக்கேற்ப சாலையோர வியாபாரிகளின் எண்ணிக்கை வரையறுக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் நகர விற்பனைக் குழுவால் நிர்ணயிக்கப்பட்டவாறு நடமாடும் விற்பனையாளர்களின் எண்ணிக்கை வரம்பை மீறாமல் இருப்பது குறித்து குழித்துறை நகராட்சியால் அஙகீகரிக்கப்பட்ட அலுவலரால் சரிப்பார்க்கப்பட வேண்டும்.

**(3)** சாலையின் அகலத்தைக் கொண்டும், சாலை விவரிப்பு குறித்தான கீழ்காணும் விவரஙகளைக் கொண்டும் இத்திட்டத்தில் கட்டுபடுத்தப்பட்ட விற்பனை மண்டலஙகளை விவரிக்கப்பட வேண்டும்.

(i) இரு வழி போக்குவரத்து கொண்ட **6** மீட்டர் அகலம் கொண்ட சிறிய சாலைகளில், நிலையான சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது. இருப்பினும், அத்தகைய சாலைகளில் எந்தவித நேரத்திலும் வாகனஙகள் அனுமதிக்கப்படாத சாலையாக அறிவிக்கப்பட்டால், அச்சாலைகளில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(ii) **3** மீட்டர் முதல் **5** மீட்டர் வரை அகலமான சிறிய சாலைகளில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது. இருப்பினும், அத்தகைய சாலைகள் ஒரு வழி வாகன சாலை என அறிவிக்கப்பட்டிருந்தால், சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(iii) **5** மீட்டர் முதல் **6** மீட்டர் வரை அகலமான சாலைகளில், சாலையின் ஒரு புறத்தில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(iV) **10** மீட்டர் மற்றும் அதற்கு மேல் அகலமான பெரிய சாலைகளில், சாலையின் இரு புறமும் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(V) ஒரு சாலையில் விற்பனைஅனுமதிக்கப்பட்ட இடத்தில் அதன் கொள்திறனுக்கேற்ப சாலையோர விற்பனையாளர்களின் எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

(Vi) சீரான போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாட்டம் குறித்து காவல்துறையின் அனுமதி பெறப்பட்ட பின்னர் தான் நிலையான சாலையோர விற்பனை அனுமதிக்கப்பட வேண்டும். தேவைப்பட்டால், அந்த இடத்தில் வாகன நிறுத்தம் தடை செய்யப்பட வேண்டும்.

(Vii) வாகன போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாட்டம் ஆகியவற்றினை கருத்தில் கொண்டு தான், சாலைகளில் நடமாடும் சாலையோர விற்பனை அனுமதிக்கப்பட வேண்டும்.

(Viii) சாலை வடிவமைப்பு குறித்தான அறிவுரைகள், இந்த துணை விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**(4)** சாலையோர விற்பனை தடைச் செய்யப்பட்ட மண்டலஙகளின்,

(i) அரசு கட்டிடஙகள், உயர்நீதி மன்றம், பிற நீதிமன்றஙகள், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், மாவட்ட ஊராட்சி / மாநகராட்சி / நகராட்சி அலுவலகஙகள், தீயணைப்பு நிலையஙகள் ஆகியவற்றின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து **10** மீட்டர் நீளத்திற்கும்.

(ii) இரயில் நிலையஙகளின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து **50** மீட்டர் நீளத்திற்கு.

(iii) நகர எல்லைக்குட்பட்ட இரயில் கடவுப்பாதையின் இரு பக்கஙகளிலும் **30** மீட்டர் நீளத்திற்கும்.

(iV) பேருந்து நிலையஙகளின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து **50** மீட்டர் நீளத்திற்கு,

(V) பண்டைய நினைவுச்சின்னங்கள் மற்றும் தொல்பொருளியல் தளங்கள் மற்றும் அகழ்வுகள் சட்டம், 2010ன்கீழ் அறிவிக்கப்பட்ட இடங்களில் பாதுகாப்பு கருதி சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது.

(Vi) மரபுரிமை சொத்து காப்பு விதிகளில் தடை செய்யப்பட்ட பகுதிகள்

(Vii) இரண்டு அல்லது அதிகமான சாலைகள் குறிப்பிட்ட இடங்களில் அனைத்து பக்கங்களில் 30 மீட்டர் நீளத்திற்கு

(Viii) ‘எந்த ஒரு கல்வி நிறுவனத்தின் நுழைவு வாயில் மற்றும் வெளியேரும்

வாயிலிருந்து 30 மீட்டர் நீளத்திற்கு.

(ix) பாதுகாப்பு கோணத்தில் தடை செய்யப்பட்ட எந்த பகுதியிலும்

(x) நகர விற்பனைக் குழுவின் ஒப்புதல் பெற்று நகரின் எந்த ஒரு பகுதியிலும் சாலையோர விற்பனை தடை செய்வது குறித்து உள்ளாட்சி அமைப்பு முடிவு செய்து, அத்தகைய இடங்களில் சாலையோர விற்பனை தடை செய்யப்பட வேண்டும்.

**குறிப்பு–** கணக்கெடுப்பின்போது அறியப்பட்ட எந்தஒரு அங்காடியையோ அல்லது இயற்கையாக அமைய பெற்ற அங்காடியையோ, விற்பனை தடை செய்யப்பட்ட பகுதியில் இணைக்கக்கூடாது.

**4. சாலையோர விற்பனையாளர்களுக்கான கட்டுப்பாடு.–** எந்த ஒரு விற்பனை மண்டலத்திலும், விற்பனை செய்ய சான்று பெற்ற சாலையோர விற்பனையாளர்கள்;

(i) வாகன போக்குவரத்து, மிதி வண்டி மற்றும் பாதசாரி நடமாற்றத்திற்கு தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(ii) கதவு, நுழைவு வாயில், தீயணைப்பு கதவுகள் அல்லது அவசரகால வெளியேறும் பாதை ஆகியவற்றிற்கு முட்டுகொடுத்து தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(iii) குடிநீர் வழஙகல், கழிவுநீர், தொலைபேசி, மின்சாரம் அல்லது இதே மாதிரியான அமைப்புகள் போன்ற எந்தவொரு பயன்பாட்டிற்கும் தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(iV) சாலையில் அல்லது அதன் பக்கத்தில் உள்ள எந்த கட்டமைப்புகளுக்கோ, வழிகாட்டு பலகைகள், அறிவிப்பு பலகைகள் , நகர வேலைகள் அல்லது நடவடிக்கைகளுக்கோ தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(V) ஆட்சேபனைக்குரிய சேவைகளையோ அல்லது பொருட்களையோ விற்பனை செய்வதோ கூடாது,

(Vi) நகர விற்பனைக் குழுவால் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தை காட்டிலும் அதிகமான இடத்தை ஆக்கிரமிப்பு செய்யக் கூடாது,

(Vii) நகர விற்பனைக் குழுவால் குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு பின் சேவைகளையோ அல்லது பொருட்களை வணிகம் செய்வதோ கூடாது,

(Viii) உள்ளாட்சி அமைப்பால் அடையாளம் காணப்பட்ட இடங்களை தவிர, இதர இடங்களில் திடக்கழிவுகளை கொட்டக்கூடாது.

(ix) விற்பனை சான்றிதழ் காலாவதியாகிய பின்னர் பொருட்களையோ அல்லது சேவைகளையோ அல்லது விற்பனையோ செய்யக்கூடாது.

(x) ஒலி பெருக்கிகள், மெகா போன்கள், ஒலி அமைப்புகள் அல்லது பிற ஒலி பெருக்கி உபகரணங்கள் மற்றும் பிரதிபலிப்பு விளம்பரங்கள் ஆகியவற்றினை பயன்படுத்தக் கூடாது.

**5. சாலையோர வியாபாரிகளின் பொறுப்பு,–** சாலையோ வியாபாரிகள் அல்லது அவரது குடும்ப உறுப்பினர்கள் அல்லது பணியாளரின் கடமைகள்,

(i) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட வேண்டும்,

(ii) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் மட்டும் விற்பனை செய்யப்படவேண்டும்,

(iii) விற்பனை செய்யும் இடத்தில் விற்பனை சான்றிதழ் காட்சிக்கு எப்பொழுதும் வைக்கப்பட வேண்டும்,

(iV) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையோர விற்பனையாளர் அல்லது அவரது குடும்ப உறுப்பினர் அல்லது அவரின் பணியாளர் விற்பனை இடத்தில் விற்பனை செய்யும்போது இருக்க வேண்டும்.

(V) எப்பொழுதும் விற்பனை இடத்தினை பாதுகாப்பாகவும், நல்ல நிலையில் வைத்திருக்க வேண்டும்,

(Vi) உள்ளாட்சி அமைப்பின் தேவைக்கேற்ப பாதுகாப்பு மற்றும் சுகாதார விதிகளை கடைப்பிடிக்க வேண்டும்,

(Vii) உணவு மாசுபடுதல் தடுப்புச் சட்டம், 1954 அல்லது இதர விதிகளை கடைப்பிடிக்க வேண்டும்,

(Viii) நகராட்சி திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016ஐ கடைப்பிடிக்க வேண்டும்,

(ix) நெகிழி கழிவு மேலாண்மை விதிகள், 2016ஐ கடைப்பிடிக்க வேண்டும்,

(x) தகுதியுடைய அலுவலர் கோரும்போது விற்பனை சான்றிதழ் காண்பிக்க வேண்டும், மற்றும்

(xi) இந்த துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிகளையும் பின்பற்ற வேண்டும்.

## அத்தியாயம்–3
## கட்டணங்கள், வரிகள் மற்றும் அபராதங்கள்

**6. விற்பனை கட்டணம்,– (1)** சாலையோர வியாபாரிகள் உள்ளாட்சி அமைப்பிற்கு விற்பனை கட்டணம் செலுத்த வேண்டும்.

(2) உப விதி (1)ன்படியான விற்பனை கட்டணம் கீழ்க்காணும் பட்டியலின்படியாகும்.

| **வ. எண்.** | **சாலையோர விற்பனையாளரின் வகை** | **பரப்பளவு** | **விற்பனை கட்டணம்** |
|---|---|---|---|
| 1. | நிலையான விற்பனையாளர் (முழு நேரம்) | 10 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.1000/– |
| | | 10 முதல் 25 சதுர அடிகள்வரை | வருடத்திற்கு ரூ.2000/– |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வருடத்திற்கு ரூ.4000/– |
| 2. | நிலையான விற்பனையாளர் (பகுதி நேரம் அல்லது நேர பகிர்வு) | 10 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.500/– |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.1000/– |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வருடத்திற்கு ரூ.2000/– |
| 3. | நடமாடும் விற்பனையாளர் (மேட்டார் பொருத்தப்பட்ட வண்டியுடன்) | 10 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.1500/– |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.3000/– |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வருடத்திற்கு ரூ.5000/– |

| | | | |
|---|---|---|---|
| 4. | நடமாடும் விற்பனையாளர் (மேட்டார் பொருத்தப்படாத வண்டியுடன்) | 10 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.750/– |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.1500/– |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வருடத்திற்கு ரூ.3000/– |
| 5. | நடமாடும் விற்பனையாளர் (தலைசுமை) | – | வருடத்திற்கு ரூ.250/– |

(3) மூன்று வருடங்களுக்கு ஒரு முறை விற்பனை கட்டணம் திருத்தியமைக்கப்பட்டு, உள்ளாட்சி அமைப்பின் விளம்பர பலகையில் அறிவிப்பு வெளியிடப்பட வேண்டும்.

**7. பராமரிப்பு கட்டணம்,– (1)** சாலையோர விற்பனையாளரின் வகை மற்றும் அங்காடியின் தகுதியின் அடிப்படையில், உள்ளாட்சி அமைப்பால் செய்யப்பட்டுள்ள குடிமை நலன்கள் மற்றும் வசதிகளுக்காக மாதாந்திர பராமரிப்பு கட்டணம் செலுத்தப்பட வேண்டும். சாலையோர விற்பனையாளர்கள் மற்றும் அங்காடி வகைகள் நகர விற்பனைக் குழுவால் நிர்ணயிக்கப்படும்.

(2) உப விதி (1)யில் குறிப்பிடப்பட்டுள்ள பராமரிப்பு கட்டணம் மாதத்திற்கு ரூ.10/–க்கு குறையாமலும் ரூ.40/–க்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

(3) பராமரிப்பு கட்டணம் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தபட்சம் 2சதவீதம் உயர்த்தப்பட வேண்டும்.

***( (*) மாநகராட்சி / நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை துணை விதிகளின்படி முடிவு செய்யப்பட வேண்டும்.)***

**8. அபராதம் விதித்தல்,–** எந்தவொரு சாலையோர விற்பனையாளரும்,

(i) விற்பனை சான்றிதழ்படி, மாற்று இடத்திற்கு செல்ல அல்லது காலி செய்ய தவறும்பட்சத்தில், அல்லது

(ii) விற்பனை சான்றிதழ் இல்லாமல் விற்பனை செயலில் ஈடுபட்டாலோ, விற்பனை சான்று மற்றும் சாலையோர வியாபாரம் ஒழுங்குமுறை சட்ட பிரிவுகள் மற்றும் அவற்றின் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகள் மற்றும் திட்டத்தில் உள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறும்போது,
மாதாந்திர கட்டணத்தில் (மூன்று) மடங்காக அபராதம் செலுத்தப்பட வேண்டும்.

(2) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை சாலையோர விற்பனைபாளர் மூன்று முறைகள் மீறினால் அவரின் விற்பனை சான்று இடைநீக்கம் செய்யப்படும். நான்காவது முறையாக விதிமுறைகளை மீறினால் அவரின் விற்பனை சான்று ரத்து செய்யப்படும்.

## அத்தியாயம்– 4
## பலவகை

**9. விற்பனை மண்டலத்தில் போக்குவரத்தினை ஒழுங்குமுறை படுத்துதல்.– (1)** நகர விற்பனை குழுவால் அறிவிக்கப்பட்ட விற்பனை மண்டலங்களில், ஒரு வழி வாகன போக்குவரத்து, வேக கட்டுப்பாடு, வாகன நிறுத்தம், கனரக வாகனங்கள் இயக்கம் மற்றும் இது குறித்த இதர பொருள்கள் குறித்து போக்குவரத்து காவல்துறையால் முடிவு செய்யப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் விற்பனை மண்டலம் அமைப்பது குறித்து போக்குவரத்து காவல்துறையால் அங்கீகரிக்கப்படவில்லையெனில், அந்த விற்பனை மண்டலத்தினை மாற்றியமைப்பது குறித்தோ அல்லது விற்பனை மண்டலத்தினை ரத்து செய்வது குறித்தோ நகர விற்பனைக் குழு பரிசீலனை செய்ய வேண்டும்.

(2) விற்பனை மண்டலத்தில், விற்பனை பகுதி, நடைபாதை மற்றும் வண்டி பாதை ஆகியவற்றினை உள்ளாட்சி அமைப்பால் தெளிவாக தெளிவுபடுத்த வேண்டும்.

**10. விற்பனை மண்டலத்தில் பொது மக்களுக்கு வழஙகப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் தரத்தினை ஒழுஙகுபடுத்துதல்.–** எந்த ஒரு விற்பனையாளரும், தயார் செய்யப்பட்ட அல்லது அந்த இடத்தில் தயாரித்து விற்பனை செய்யும் உணவு பொருட்கள் குறித்து உணவு மாசுபடுதல் தடுப்புச் சட்டம், 1954ல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிமுறைகளையும் பின்பற்ற வேண்டும். தவறும்பட்சத்தில், மேற்படி சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சம்பந்தப்பட்ட அதிகாரம் பெற்ற அலுவலரால் தண்டனைக்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் மற்றும் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் தண்டனை வழஙகப்பட வேண்டும். நகர விற்பனைக் குழுவால் அந்த சாலையோர வியாபாரியின் விற்பனை சான்றினை உடனடியாக ரத்து செய்யப்பட வேண்டும்.

**11. விற்பனை மண்டலஙகளில் குடிமை சேவைகளை ஒழுஙகுப்படுத்துதல்,–** (1) விற்பனை மண்டலஙகளில், பொது கழிப்பிடம் மற்றும் குடிநீர் வசதிகளை உள்ளாட்சி அமைப்பால் ஏற்படுத்த வேண்டும்.

(2) உள்ளாட்சி அமைப்பால் திடக்கழிவுகளை சரியான முறையில் சேகரிக்கப்பட வேண்டும்.

(3) சாலையோர வியாபாரிகள் தனிநபர் தேவைக்கு மின் செரிவூட்டும் சாதனம் (rechargeable lamps) அல்லது சுயமாக மின் உற்பத்தி செய்யும் சாதனஙகள் உபயோக படுத்தல் வேண்டும்.

(4) விற்பனை மண்டலஙகளில் தனி நபர் மின்சார இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு வழஙகக் கூடாது.

(5) மின்சார கம்பஙகளிலிருந்து முறையற்ற மின் உபயோகத்தை தடுக்கப்படும்.

**நகர்மன்றத் தீர்மான எண்.3196**

**அஙகீகரிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 9</u>

குழித்துறை நகராட்சியின் சார்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்குகளை நடத்த நாகர்கோவில், பத்மனாபபுரம், குளச்சல் நகராட்சி வழக்குகளை சிறப்பாக நடத்தி வரும் அரசு வழக்கறிஞர் திரு. ஆதிமூலபாண்டியன் அவர்களை குழித்துறை நகராட்சி நிலை வழக்கறிஞராக (Standing Counsel) நியமனம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**நகர்மன்றத் தீர்மான எண்.3197**

**அஙகீகரிக்கப்பட்டது**

ஆணையாளர் மற்றும்
தனி அலுவலர்,
குழித்துறை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.